# அருப்புக்கோட்டை நகராட்சி

## சார்வாரி ஆண்டு வைகாசி மாதம் நாள் : 05.06.2020 வெள்ளி கிழமை காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :– திரு.S.பார்த்தசாரதி BPT., MSc(psy)., ஆணையாளர் (கூ.பொ) தனி அலுவலர்**

பொருள் 1 : ஆணையாளர் ஏப்ரல் – 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**
பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**
மன்றப்பொருள் அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.949**

பொருள் 2 : நகராட்சி பொறியாளர் ஏப்ரல் – 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**
பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**
மன்றப்பொருள் அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.950**

பொருள் 3 : தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் (TURIP 2020-21) ன் கீழ் கீழ்க்கண்டுள்ள பணிகளை கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின்படி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் சாலைகள் அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ.460.00 இலட்சத்தினை தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் (TURIP 2020-21) ன் கீழ் முழுமான்யநிதியுடன் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் திட்டவிபரத்தினை உரிய நிதி உதவி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் (TURIP 2020-21)**

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் (மீட்டர்) | அகலம் (மீட்டர்) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | வா.எண்.7 கலைஞர் நகர் 4வது 2வது குறுக்கு தெரு, வா.எண்.4 நெசவாளர் காலனி 11வது தெரு , வா.எண்.28 SR தெரு, வா.எண்.27 சிதம்பரராஜபுரம் தெரு, வா.எண்.36 குழந்தைவேல்புரம் 4வது தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 1330 | 5.50 | 150.00 |
| 2. | வா.எண்.9 திருவள்ளுவர் காலனி, ஜோதிபுரம் தெரு, வா.எண். 5 சண்முகநாதபுரம் 4வது, 5வது, 6வது, 7வது ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 1230 | 5.50 | 150.00 |
| 3. | வா.எண்.4, நெசவாளர் காலனி 2வது 8வது தெரு, வா.எண்.இரயில்வேபீடர் ரோடு மேற்கு, இரயில்வே பீடர் ரோடு கிழக்கு 6வது, நேரு நகர், தேவாடெக்ஸ் (வெஙகடேஸ்வரா பள்ளி ரோடு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் தார் சாலை அமைக்கும் பணி | 1885 | 5.50 | 160.00 |
| | மொத்தம் | | | **460.00** |

**அலுவலக குறிப்பு:–**
மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2526/2020/இ1

**தீர்மானம் :**
மன்றப்பொருள் அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.951**

பொருள் 4 : இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண் TN 67 AB 6892 வாகனத்திற்கு தகுதிச்சான்று 02.06.2020 ஆம் தேதியன்று முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு பழுதுபணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற TVS மதுரை அவர்களிடம் மேற்கொண்டு சரிசெய்து தகுதிச்சான்று பெற பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகைக்கு செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண். 2146/2020/எச்1

<u>தீர்மானம் :</u>

மன்றப்பொருள் அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.952</u>

பொருள் 5 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்று நிலையத்தில் திருப்புவனம் பேரூராட்சி சந்தை நடத்துவது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் ஏற்கனவே WP (MD) No. : 17538 of 2019 வழக்கு நடைபெற்றுவருகிறது. மேற்கண்ட வழக்கு நடவடிக்கையில் உயர்மட்ட குழு கூட்டம் அமைத்து முடிவு எடுக்க அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் உயர்மட்ட குழு கூட்டம் நடத்தப்பட்டது. அதன்படி திருப்புவனம் பேரூராட்சிக்கு சந்தை நடத்துவதற்கு 1 ஏக்கர் நிலம் ஒதுக்கவும், மேலும் தலைமை நீரேற்று நிலையத்திற்குள் செல்வதற்கு பாதை அமைத்து பாலம் ஏற்படுத்திக்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தலைமை நீரேற்று நிலையத்தின் தெற்கு பகுதியில் ஓடைக்கு மேல் பாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.12,00,000/– ஆகும். மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண். 2323/2020/இ1

<u>தீர்மானம் :</u>

மன்றப்பொருள் அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.953</u>

பொருள் 6 : அருப்புக்கோட்டை நகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கிவரும் வாகனம் ஸ்கார்பியோ TN 67 AJ 2135 வாகனமானது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரின் கடிதம் ந.க.எண்.946/2020/அ4 நாள் 26.05.2020 கடிதத்தின் அடிப்படையில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவு கடித ந.க.எண்.2369/2020/சி1 நாள் 26.05.2020 ன்படி கொரோனோ வைரஸ் தடுப்பு சிறப்பு பணிக்கு சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கு சுகாதார ஆய்வாளர்களை ஏற்றிக்கொண்டு சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் இறக்கிவிட்டு மீண்டும் அருப்புக்கோட்டை வரும்வழியில் கடலூர் மாவட்டம் சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சேப்பாக்கம் அருகில் விபத்து ஏற்பட்டதில் காரின் முன்பகுதி மற்றும் இடது பக்கம் முழுவதும் சேதமடைந்துவிட்டதால், வாகனமானது விழுப்புரம் மகேந்திரா கம்பெனியால் அங்கீகரிக்கப்பட்ட டீலரான M/s.Schangalaya Motors சோருமில் பழுதுபணி பார்ப்பதற்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கான பழுது பணிகள் மேற்கொள்ள மகேந்திரா கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட டீலரான M/s.Schangalaya Motors ல் பழுது பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.650744/–க்கு (invoiceல் உள்ளபடி) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி அவசர அவசியம் கருதி வாகனத்திற்கான பழுதுபணிக்கு மகேந்திரா கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட டீலரான M/s.Schangalaya Motors விழுப்புரம் நிறுவனத்தில் பழுது பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கும் வேலை உத்தரவு வழஙகியதையும் அனுமதிக்கலாம். ந.க.எண்.2369/2020/இ2

<u>தீர்மானம் :</u>

மன்றப்பொருள் அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.954</u>

தனி அலுவலர்

அருப்புக்கோட்டை நகராட்சி